2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 366, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

366—

நியாய விலைக் கடை

***4391—திரு. கு. நல்லதம்பி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, 72-வது வட்டத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 72-வது வட்டத்தில் ஏற்கெனவே 8 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சியில் உள்ள நியாய விலைக் கடைகளை மறு சீரமைத்து, ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளைப் பிரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட 72-வது வட்டத்திலும் புதியதாக நியாய விலைக் கடைகள் அமைக்க குடும்ப அட்டைதாரர்களுக்கு வசதியான தகுந்த இடங்களைத் தெரிவு செய்து, ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளை மறு சீரமைத்து, புதிய நியாய விலைக் கடைகள் திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.*

திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட பழைய 72-வது வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதியதாக 107-வது வட்டம் 104-வது வட்டம்*

என பாதி பாதியாகப் பிரிக்கப்பட்டது. அந்தப் பகுதியில் அப்பாராவ் தோட்டம், கந்தன் தெரு, ஔவைபுரம், வைத்தியநாதன் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய தெருக்களில் உள்ள மக்களுக்கு வெங்கடாச்சலம் தெருவில் இரண்டு கடைகள் ஒரே இடத்தில் செயல்படுகின்றன. ஒரு கடைக்கு தலா மட்டும் 1,285 கார்டுகள் வீதம் 2,570 குடும்ப அட்டைதாரர்கள் அங்கே பொருட்களை வாங்கி வருகின்றனர். ஆகவே, வெங்கடாச்சலம் தெருவில் உள்ள கடைகளோடு கூடுதலாக ஒரு புதிய கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன, புதியதாக பிரிக்கப்பட்டிருக்கிற 104 மற்றும் 107-வது வட்டங்களில் எந்த இடம் மக்கள் அனைவரும் சென்று பொருட்களை எளிதாக வாங்கக்கூடிய இடமாக இருக்கிறதோ அந்த இடத்தை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் முடிவினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, எழும்பூர் தொகுதியில் பெரும்பாலான நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. குறிப்பாக, சேத்துப்பட்டு McNichols Road பகுதியில் இரண்டு கடைகளும், புரசைவாக்கம் வடமலைப்பிள்ளை தெருவில் ஒரு கடையும், பார்த்தசாரதி தெருவில் இரண்டு கடைகளும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்தக் கடைகள் சொந்தக்

2014 ஆகஸ்ட் 7]

கட்டடங்களில் இயங்க உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் பகுதி நேர அங்காடிகளையும், முழுநேர அங்காடிகளையும் சொந்தக் கட்டடங்களில் இயக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கும், பார்வைக்கும் எடுத்துச் சென்று, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் 1,732 முழுநேர நியாய விலை அங்காடிகள் மற்றும் 12 பகுதிநேர அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, 103 முழுநேர அங்காடிகள், 3 பகுதிநேர அங்காடிகள் என மொத்தம் 106 புதிய அங்காடிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவுப்படி, மாண்புமிகு அம்மா அவர்களின் மூன்றாண்டுகால ஆட்சியில் திறக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினரின் எழும்பூர் தொகுதியில் மட்டும் மூன்று புதிய பகுதிநேரக் கடைகளையும், முழுநேரக் கடைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் அரிசி, பருப்பு உள்ளிட்ட மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் வறட்சியின் காரணமாக, காய்கறி உற்பத்தி குறைவாக இருக்கிற காலத்தில், அதற்கென்று விசேஷமாக நியாய விலைக் கடைகளில் காய்கறிகளை மலிவு விலையில் விற்பதற்கு

எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னை மாநகரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 52 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இன்னும் தேவையான இடங்களில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 367, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

367—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***21280—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டத்திற்கென தனியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலக நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் சுமார் 10 கி.மீ. தொலைவில் அவினாசி பகுதி அலுவலகம் இயங்கி வருகிறது. அவினாசி பகுதி அலுவலகத்தில் 2,557 போக்குவரத்து வாகனங்கள்